# ரட்சிப்பு.

( த. வெர்ஜின் குமார் )

முறையான இறையியலில், ரட்சிப்பு என்ற வார்த்தை, தேவன் மனிதனுக்காக வைத்திருக்கிற மிக நல்லவற்றை அவன் அடையவிடாமல் தடுக்கிற எல்லாவற்றிலிருந்தும் அவனை விடுவிக்கிற செயல்பாட்டை குறிக்கிறது. - அகில உலக வேதாகம சொல் அகராதி.

சக்தி உபயோகித்து ஒருவரை மிகப்பெரிய அழிவில் இருந்து திடீரென வேகமாக பறித்தெடுக்கிற ஒரு செயல் - ரட்சிப்பு. அடிப்படை அர்த்தத்தில் கூறுவோமானால், ரட்சிப்பு என்பது, அழிவில் இருந்து அல்லது மரணத்தில் இருந்து ஒரு உயிரை காப்பாற்றுவது. - ஹோல்மன் வேதாகம அகராதி.

ரட்சிப்பு என்பது, சகல மீண்டெடுப்பின் செயல்களையும், செயல்முறைகளையும் உள்ளடக்கிய, சுவிஷேஷ வார்த்தை. - டேக்ஸ் வேதாகமம்.

**"ரட்சிப்பு"** என்னும் வார்த்தை வேதாகமத்தில் **163** இடங்களில் காணப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் 118 முறைகளும், புதிய ஏற்பாட்டில் 43 முறைகளும் காணப்படுகிறது. சற்று மாறுதல்களுடன், 'ரட்சிக்க' 'ரட்சிக்கப்பட்டான்' போன்ற வார்த்தைகள் நூற்றுக்கணக்கான மற்ற இடங்களில் உபயோகப் படுத்தப் பட்டுள்ளது. தேவன் மனுக்குலத்தை மீட்கும்படியாக செய்த எல்லா செயல்களையும், செயல்முறை களை யும் குறிக்கிறதான, சகலத்தையும் உள்ளடக்கிய வார்த்தை. - ஆன்ரு வாமக்கின் வேதாகம விளக்கம்.

வார்த்தை படிப்பு.

கிரேக்; **' சொட்டேரியா " " ரட்சிப்பு "** . மரணத்தில் இருந்து விடுவிக்கப்படுதல்.

கிரேக்; **" சொட்டேர் " ரட்சகர் "** மரணத்தில் இருந்து விடுவிக்கிறவர்.

எபிரே; **'யாஷா' ' யேஷுவா'- இயேசு.**

## ( 1.) இவ்வளவு பெரிதான ரட்சிப்பு.

***எபி 2:3*** *முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், 4 அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்*

**1பேது 1:9** உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்.
**10** உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்;
**11** தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.
**12** தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.

### ஏன் ரட்சிப்பு இவ்வளவு பெரியது.

1. அதன் ஸ்தாபகர் - இயேசு கிறிஸ்து பிரசங்கித்தது. ( எபி; 2;3 )
2. அதன் விலை - ஒரே பேறான குமாரனின் மரணம்(யோவான்; 3;16, கொலோ;1;20, 1பேது; 2;24 )
3. அதன் சமயம் ; 1. காலமும் நித்தியமும் ( 2 கொரி 6;2. ஐசா; 45;17, எபி; 5;9 ), 2. யூதரும், புற ஜாதிகளும். ( ரோம்; 1;16).
4. அதன் பலன்கள்.
   1. சரீர சுகம். ( அப்; 3;16, 4;9-12, மத்; 8;17, 1 பேது; 2;24, யாக்;5;14 )
   2. ஆத்தும ரட்சிப்பு. ( 1 பேது; 1;9, 2 கொரி; 7;10, எபே;1;7, 2;8-9 )
   3. விடுதலை. ( யாத்; 14;13, ஐசா;33;2 ).

4. சந்தோஷம், சமாதானம் ( சங்;20;5, 51;12, ஐசா;12;3, ரோமர்; 5;1-2 )

5. பாதுகாவல் ( ஐசா; 26;1 )

6. அனுதின நன்மைகள். ( சங்; 68;19 .ஆங்கில வேதாகமம். )

5. அதன் முடிவில்லாய்மை - மிக ஆழத்திற்கு, மிக கடைசி எல்கைகளுக்கு அது மீட்பதற்காக சென்று, மீட்கப்பட்டவரை அதி உன்னத வானங்களுக்கு உயர்த்துகிறது. ( எபே; 3;18, அப்; 13;47, சங்; 98;3 ஐசா;49;6 )

6. அதன் தெய்வீக தொடக்கம் ( சங்; 25;5, 37;39 )

7. அதன் நிரூபணம் ( எபி;2;3-4, மாற்கு; 16;15-20 )

8. அதன் அடிப்படை தேவைகள். - கிருபையும், விசுவாசமும் மாத்திரம் ( ரோமர்; 3;24-31, எபே;2;8-9, தீத்து; 2;11 )

9. அதன் பிரத்தியேகத்துவம் ( அப்; 4;12 )

10. அதை பெற்றுக்கொள்ளும் சாதாரண விதம்; ( 1.யோவான்; 1;9. யோவான்; 3;16, ரோமர்; 1;16, 10; 9-10, நீதி; 28;13, சங்; 32;5 )

11. அதற்காகவே இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தார், மரித்தார், உயிர்த்தெழுந்தார் ( மத்;1;21, மாற்கு;2;17, லூக்;19;10 )

12. அது இல்லாமல் மனிதன் நித்திய மரணத்துக்காக நிச்சயிக்கப்பட்டவன். ( மாற்கு; 16; 15-18, ரோமர்; 6;23 )

13. அது இல்லாதவர்களுக்கு ஒரு பெரிய அழிவு காத்திருக்கிறது. ( 1 தெச;1;9, ரோமர்; 6;23, மாற்கு 16;16, யோவான்; 3;36. )

14. அதை பிரசங்கிக்குமாறு இயேசு கட்டளையிட்டிருக்கிறார். ( மத்; 28;18-20, மாற்கு; 16;15-18 )

## ( 2. ) <u>திரித்துவம்.</u>

1யோவா 5:7 (பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;

2கொரி 13:14 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

தெய்வீக திரித்துவம் என்பதன் அர்த்தம் - சுயமான, தனியான மூவர் தேவத்துவத்தில் இருக்கிறார்கள், ஒவ்வொருவருக்கும், ஒரு மனிதனுக்கு இருக்கிறது போல, சுயமான ஆவிக்குரிய சரீரம், சுயமான ஆத்துமா, சுயமான ஆவி இருக்கிறது.

திரித்துவ தத்துவம், நித்திய வல்லமை இவைகள், உருவாக்கப்பட்ட - காணப்படக்கூடியவற்றில் இருந்து தெளிவாக பார்க்கவும், உணர்ந்து கொள்ளவும் முடியும்.

திரித்துவத்தை கீழ்க்கண்டவாறு ஒப்பிட்டு மனதிலாக்கலாம் ( மனைதிலாக்குவதற்கு மாத்திரமே, எந்த விதத்திலும் இணையானது அல்ல )
சூரியன் = பிதா வாகிய தேவன்.
வெளிச்சம் = இயேசு கிறிஸ்து வாகிய தேவன்.
வெப்பம் = பரிசுத்த ஆவியாகிய தேவன்.

திரித்துவம் செயல் படும் விதம். ( மனைதிலாக்குவதற்கு மாத்திரமே எந்த விதத்திலும் இணையானது அல்ல )
ஒரு மின்சார பல்ப் செயல் படுவதை எடுத்துக்கொள்வோம்.
ஸ்விச் = பிதா வாகிய தேவன்.
எரியும் கம்பி ( பிலமெண்ட் ) = இயேசு கிறிஸ்து வாகிய தேவன்.
மின்சாரம் = பரிசுத்த ஆவியாகிய தேவன்.

## <u>( 3. ) தேவன் எப்படி இருக்கிறார்.</u>

*யோவா 4:24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார். யோவான்; 5;37*

தேவனுக்கு ஒரு சரீரம், வடிவம், உருவம், உறுப்புகள், சுயமான ஆவி, ஆத்துமா, இவைகள் எல்லாம்

( ஒரு மனிதனுக்கு உள்ளது போல ) இருக்கிறது. மனிதன் தேவனுடைய சாயலாக, தேவனுடைய ரூபத்தின் படி சிருஷ்டிக்கப்பட்டவன். ( ஆதி; 1;26-28 ) நாம் தேவனைப்போல இருக்கிறோம் என்றால் அதன் அர்த்தம் தேவன் நம்மைப்போலவே இருக்கிறார். தேவனை பலர், பலமுறை தங்கள் பௌதீக கண்களால் கண்டிருக்கின்றனர். ( ஆதி; 18; 1-33. 19;24. தானி; 7;9-14. அப்; 7;56-59.வெளி; 4;2-5 )

## ( 4. ) மனிதனுடைய சிருஷ்டிப்பு.

ஆதி; 1;26-27, 2;7, 1 தெச; 5;23
தேவன் ............> ஜீவ சுவாசம் .......................> ஆவி.
பூமியின் மண் ......................................................> சரீரம்.
ஆவி + சரீரம்......................................................> ஆத்துமா.

1 தெச.5;23 ம் வசனத்தில் உள்ள வரிசைப்பிரகாரமாவது.... ஆவி, ஆத்துமா, சரீரம்

*1கொரி 3:16 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?*
தேவனுடைய ஆலயத்துக்கு 3 பகுதிகள் உண்டு. 1. மகா பரிசுத்த ஸ்தலம் 2. பரிசுத்த ஸ்தலம் 3. வெளிப்பிரகாரம். இதில் தேவன் வசிப்பது மகா பரிசுத்த ஸ்தலத்தில்.
மனிதனுக்கு 3 பகுதிகள் உண்டு. 1. ஆவி 2. ஆத்துமா 3. சரீரம். இதில் மனிதனுடைய ஆவியில் தேவன் வசிக்கிறார், தொடர்பு கொள்ளுகிறார்.

**ஆவி**; மனிதனின் மிக உன்னத பகுதி. மனிதனின் மிக உள்ளான பகுதி. இந்த பகுதியிலேயே தேவன் வசிக்கிறார். ஆவியின் மூலமே நாம் தேவனோடு தொடர்பு கொண்டு அவரை ஆராதிக்கிறோம். ( *யோவான். 4;24* ). ஆவியே உண்மையில் நமக்கு ஜீவன் கொடுக்கிற பகுதி ஆகும். ( *யாக்; 2;26* ). ஆவி, தேவனிடம் இருந்து கட்டளைகளை பெற்றுக்கொண்டு அவற்றை ஆத்துமாவுக்கு தெரிவிக்கிறது. ஆத்துமா அந்த தகவல்களை சரீரத்துக்கு தெரிவித்து, சரீரமானது அத்தகவல்களுக்கு கீழ்ப்படிந்து, ஆவியின் கட்டளைகளை நிறைவேற்றுகிறது.

**ஆத்துமா;** மனிதனுடைய சுய சித்தத்தின் கருவி. ஒரு மனிதனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே அவர் இருக்கிறார். ஆத்துமா ஒரு மனிதருடைய பிரதிநிதியாகவும் அவருடைய தனித்தன்மையை வெளிப்படுத்துகிறதாகவும் இருக்கிறது.
ஆத்துமா.....
1. தேவனுக்கு கீழ்ப்படியும்படியாக சித்தம் கொண்டு..... ஆவியை, மனிதன் மேல் ஆளுகை செய்யும்படியாக செய்யலாம்.
2. தேவனுக்கு கீழ்ப்படியாதபடிக்கு சித்தம் கொண்டு.... சரீரத்தை, மனிதன் மேல் ஆளுகை செய்யும்படியாக செய்யலாம்.
3. தேவனுக்கு கீழ்ப்படியாதபடிக்கு சித்தம் கொண்டு.... ஆவியை ஒடுக்கி, தானே ( ஆத்துமாவே ) மனிதன் மேல் ஆளுகை செய்யும்படியாக செய்யலாம்.

ஒருவர் முறையான ஆவிக்குரிய மனிதராக, தேவனோடு முறையான தொடர்பு உள்ளவராக (*யோவான்; 4;24* ), பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிறவராக ( *ரோமர்; 8;14* ) இருக்க வேண்டுமானால், அவர் "ஆவிக்கும் " " ஆத்துமாவுக்கும் " உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான ஒரே வழி எபி; 4;12. தேவனுடைய வார்த்தை. ( ***எபி 4:12*** *தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்து கிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.* ). தேவனுடைய வார்த்தை ஆவியையும் ஆத்துமாவைவும் பிரிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இந்த பிரிவினையின் அனுபவத்தை நமக்கு தருகிறார்.

வேதாகமத்தில் **" இருதயம் "** இதயம் என்ற வார்த்தை வழக்கமாக ஆவியையும், ஆத்துமாவையும் சேர்த்து குறிக்கிறது.

**சரீரம்;** நாம் காணக்கூடியதும், உணரக்கூடியதுமான மாம்சம், இரத்தம் கொண்ட பகுதி. ஆவியையும் ஆத்துமாவையும் தன்னுள் வைத்திருக்கிற கூடு - சரீரம்.

## ( 5 ). <u>தேவன் மனிதனை சிருஷ்டித்ததன் நோக்கம்.</u>

1. உலகத்தை ஆளுவதற்காக. ( *ஆதி; 1;28, சங்; 8; 4-6, எபி; 2; 7,8* )
2. தேவனை ஆராதிக்க ( தேவனோடு உறவு கொள்ள ). *யோவான்; 4;24.*
3. தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக *எபே; 2;7.*

## ( 6 ). <u>மனிதனின் வீழ்ச்சி.</u>

ஏதேன் தோட்டத்தில் இரண்டு முக்கியமான மரங்கள் இருந்தன; *ஆதி; 2;9.*

1. ஜீவ விருட்சம். இது இப்போது பரலோகத்தில் இருக்கிறது. *வெளி;2;7.*
2. நன்மை தீமை அறியத்தக்க விருட்சம். இது பிற்காலத்தில் அழிந்து போனது.

**தேவனுடைய கட்டளை...** *ஆதி 2:16 தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.*

*17 ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.*

***" நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்..".*** அதாவது ஜீவ விருட்சத்தின் கனியையும் சேர்த்து நீ புசிக்கலாம்.. மனிதன் ஜீவ விருட்சத்தின் கனியை புசித்து நித்தியமாக வாழ வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். ( *ஆதி ; 3;22-24* ) அவன் பாவத்தால் வீழ்ந்த பிறகே, அந்த மரத்தை மனிதனுக்கு எட்டாத படி ஆக்கினார். ( *ஆதி; 2;17* ).
***"நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்.".***

**ஆனால் ஆதாம் சாத்தானுக்கு கீழ்ப்படிந்தான், தேவனுக்கு கீழ்ப்படியாமறபோனான், பழத்தை புசித்தான்.**

## ( 7 ). <u>*கீழ்ப்படியாமைக்கு தண்டனை.*</u>

***"அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்"***
<u>சாகவே சாவாய்...</u> இங்கே குறிப்பிடப்பட்டுள்ள மரணம்... **" ஆத்மீக மரணம் "**
ஆத்மீக மரணத்தால் வந்தது... 1. சரீர மரணம் 2. நித்திய மரணம்.

**ஆத்மீக மரணம்;** எபே; 2;1,5. கொலோ;2;13. தேவனிடமிருந்து பிரிதல். அதாவது தேவனுக்கும் மனிதனின் ஆவிக்கும் உள்ள அனைத்து தொடர்புகளும் அற்றுப்போகுதல்.
**சரீர மரணம்;** யாக்கோபு; 2;26. மத்; 8;22. அதாவது , மனித சரீரத்துக்கும் உலகத்துக்கும் உள்ள சகல தொடர்புகளும் அற்றுப்போவது.
**நித்திய மரணம்;** நித்தியமாக தேவனிடமிருந்து பிரிவு. மத்; 10;28, வெளி; 21;8.

எனவே மனிதன் ஆவிக்குரிய மரணமடைந்தான், அதனால் சரீர மரணமும், நித்திய மரணமும் தொடர்ந்து வந்தது.

**மனிதன் வீழ்ச்சியினால் இழந்தது எவை ?.**

1. ஆவிக்குரிய வாழ்வு, சரீர வாழ்வு, நித்திய ஜீவன். ( *ஐசா; 59;2, ரோமர்; 5;12-21, எபே; 2.* )
2. தேவனோடு உறவு. ( ஐசா; 59;2 )
3. விலங்கினங்களோடு நல்லுறவு. ( ஆதி; 9;2 ).
4. எல்லாவற்றின் மேலும் அதிகாரம். ( சங்; 8 ).
5. சாத்தானிடமிருந்து விடுதலை. ( யோவான்; 14;30, 2 கொரி; 4;4, எபே; 6;10-18, வெளி; 12;9 ).
6. தேவனப்பற்றிய பரிபூரணஉணர்வு. ( ஆதி; 2;25, 3;7 )
7. நற்கிரியைகள் செய்வதற்கான முழு வல்லமை. ( ஆதி; 6; 5-7. ரோமர்; 7 ).
8. பரிபூரண இச்சையடக்கம். ( எபே; 2. கலா; 5 ).

9. ஜீவ விருட்சத்தின் மேல் உரிமை. ( ஆதி; 3;22-24 ).
10. ஏதேன் தோட்ட வீடு. ( ஆதி; 2;15, 3;22-24 ).
11. தேவ மகிமை. ( ரோமர்; 3;23 ).
12. உண்மையான பரிசுத்தம், நீதி. ( எபே; 4;22-24 ).
13. பரிபூரண ஆரோக்கியம். ( ஆதி; 3;16-19, மத்; 8;17, 1 பேதுரு; 2;24. ).
14. தேவனோடு உள்ள பரிபூரண உறவினால் கிடைக்கும் எல்லா நலன்கள். (வெளி; 21; 1-7, 22;1-3 )

**பாவத்தின் நியாயத்தீர்ப்பு;** ( ஆதி; 3;14-19, 23-24 ).
பாவத்தினால் மனிதன் அறுவடை செய்தது....
நோய், துன்பம், துயரம், வறுமை, குற்றஉணர்வு, மரணம், ஆத்தும் இழப்பு, சாத்தானோடும் அசுத்த ஆவிகளோடும் தொடர்பு, ஒரு கீழான நிலை, தீமை செய்ய தீயவனாக இருக்க வல்லமை, சுய திருப்தி, அசுத்தமான சிற்றின்ப இச்சைகள் பழக்கங்கள், அவ நம்பிக்கை, தேவனிடமிருந்து பிரிவு, கஷ்டம், உபத்திரவம், நரகம், நித்திய அழிவு, ...இன்னும் எழுத இடம் கொள்ளாத அநேக சாபங்கள்.
மனிதன் சீரழிந்தவனானான் ( ரோமர். 1 ), அந்தகாரப்பட்டவனானான் (எபே; 4;18 ), மனதில் குருடானவனானான் ( 2 கொரி; 4;4 ), துர்மனசாட்சி உள்ளவனானான், பிடிவாதமும் கீழ்ப்படியாமையும் உள்ளவனானான் ( ஐசா; 28;14, ரோமர்; 8;1-13 ), துர் இச்சைகள் உள்ளவன் ஆனான் ( எபே; 2;1-3 ), தொடர்ந்து அக்கிரமக்காரனாக ஆனான் ( ஆதி; 6;5 ), அருவறுப்புகளால் நிறைந்தவனானான் ( எரே; 17;9, மாற்கு; 7;19-21, ரோமர்; 1;18-32, 1 கொரி;6;9-11, கலா 5;19-21, கொலோ;3;5-10), வீழ்ந்தவனானான் - தானும் பாவ சுபாவமுடையவனாகி, தன் சந்ததி அனைத்தையும் அவர்களின் புலன்களோடு பாவ சுபாவமுள்ளவர்களாக்கினான் ( ரோமர்; 5;12 - 21, எபே; 2;1-3, சங்; 51;5, ரோமர்; 5;12 ), தன் சந்ததி அனைத்தையும், தேர்ந்தெடுத்ததாலும் பழக்கங்களாலும் - சாத்தானின் மக்களாக்கினான். ( யோவான்; 8;44, 2 கொரி; 4;4, எபே; 2;1-3, 1 யோவான்; 3;8-10 ).

## ( 8 ). <u>எல்லோரும் பாவிகள். எப்படி</u> ?.

ஆதாமுடைய ஒரே கீழ்ப்படியாமையின் செயலினால், எல்லா மனிதரும்.....

* பாவம்செய்கிறவர்கள். ( *ரோம 3:23 எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,* )

* பாவத்துக்கு அடிமைகள். ( *ரோம 6:17 முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். )*

* தேவ கோபாக்கினைக்குட்பட்டவர்கள். ( *எபே 2:3 அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். ). ரோமர்; 5;19, கலா;3;22.*

ஆகையால் எல்லா மனிதருக்கும் ஒரு ரட்சகர் அவசியம்.

**<u>ஆதாமின் பாவம் எப்படி எல்லா மனிதருடைய பாவமாக கருத்தில் கொள்ளப்படுகிறது. ?</u>**

எபிரேயர்; 7 ம் அதிகாரம். ஆபிரகாம், மெல்கிசேதக்குக்கு தசம பாகம் கொடுக்கிறார். லேவி, ஆபிரகாமின் கொள்ளுப்பேரன்.

*எபி 7:10 தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்.*

ஆனால் உண்மையில், லேவி, ஆபிரகாம் மெல்கிசேதக்குக்கு தசமபாகம் கொடுத்த சமயத்தில் பிறக்கக்கூட இல்லை. ஆனாலும் வேதாகமம் இப்படியாக எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறது, " லேவி ஆபிரகாம் மூலமாக, மெல்கிசேதக்குக்கு தசமபாகம் கொடுத்ததாக சொல்லலாம் " என்று.

*எபி 7:9 அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால்,*

எனவே, வேதாகமத்தின் படி, ஆபிரகாமில் இருந்து பிறந்தவர்கள் அனைவரும், அவன் சந்ததியும், மெல்கிசேதக்குக்கு தசமபாகம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் மெல்கிசேதக்

கிடமிருந்து ஆசீர்வாதங்களை பெறுகிறவர்கள். எனென்றால், ஆபிரகாம் மெல்கிசேதக்குக்கு தசமபாகம் கொடுத்த போது, ஆபிரகாமின் சந்ததி முழுவதும் அவனுடைய அரையில் இருந்தது.

**இதே அர்த்தத்தில்....**

தேவன் மனிதனை சிருஷ்டித்த போது - மொத்த மனுக்குலத்தையும், அவனிடமிருந்து பிறக்கப்போகிற அவனது சந்ததி முழுவதையும் - அவனது அரையில் வைத்து சிருஷ்டித்தார்.

எனவே, ஆதாம் தேவனால் தடைசெய்யப்பட்ட கனியை புசித்ததனால்....பாவம் செய்தான் .....பாவியானான்.. **அப்போது அவனது அரையில் இருந்தவர்கள் அனைவரும் பாவம் செய்தார்கள் ---- பாவிகளாக்கப்பட்டார்கள்.** ( ரோமர்; 5; 15-19, 3;23, கலா; 3;22 ). இதனால் யாராவது ஒருவர், " நான் பாவி அல்ல...என்னிடத்தில் பாவம் இல்லை " என்று சொல்வாரானால்....... 1. அவரிடத்தில் சத்தியம் இல்லை 2. அவர் இயேசுவை பொய்யன் ஆக்குகிறார். 3. தேவனுடைய வார்த்தை அவரிடத்தில் இல்லை.

எனவே தேவனுடைய வார்த்தை அறிவிக்கிறது......- **எல்லோரும் பாவிகள்........எல்லாரும் நித்திய மரணத்துக்காக விதிக்கப்பட்டவர்கள்.**

ஆனாலும் தேவன் தன் ஆதி அசல் தீர்மானங்கள் உடைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. தன் பிரியமான, தன் சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுக்குலம், நித்திய மரணத்தில் அழிந்து போக அவர் விரும்ப வில்லை. எனவே அவர் வாக்குத்தத்தம் செய்தார், ஒரு மீட்பர்....ரட்சகர்....இயேசுகிறிஸ்து.. வருவார்...வந்து மனுக்குலத்தின் ஆளுகையை மீண்டும் நிலைநாட்டி, தேவனுடைய ஆதி தீர்மானத்தையும் அவர் சித்தத்தையும் நிறைவேற்றுவார். ( ஆதி; 3;15, ஏசா; 53, எபே; 1;7 ).

## ( 9 ). <u>இயேசுவுக்குள்.</u>

*யோவா 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி ......* வார்த்தை மாம்சமான போது, அவர் எல்லா மாம்சத்தையும் ( மனுக்குலத்தையும் ) தன்னுள் வைத்திருந்தவராக இருந்தார். இயேசு கிறிஸ்து சகலமும் தனக்குள்ளாக இருக்கிறவர். எபி; 7 ம் அதிகாரம்.

நாம் எப்படி இயேசு கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டோம் ?. **....தேவன் அதை செய்ததால்**. எபே; 2;10. 1 கொரி; 1;30.

எப்படி, ஆதாமுடைய செயல்.. கீழ்ப்படியாமை - எல்லோருடைய செயலாக...கீழ்ப்படியாமையாக எடுத்துக்கொள்ளப்பட்டதோ... **அவ்வாறாகவே-**

இயேசு கிறிஸ்துவுடைய செயல்....கீழ்ப்படிதல் - எல்லோருடைய செயலாக ...கீழ்ப்படிதலாக எடுக்கப்படுகிறது. ( ரோமர்; 5; 12-19 ).

எனவேதான் இயேசு கிறிஸ்து **" பிந்தின ஆதாம் "** என்று அழைக்கப்படுகிறார். ( 1 கொரி; 15;45 ).

'பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்' ( எசே; 18;4 ). இது வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு மிருகமோ, அல்லது தேவ தூதனோ மனிதனுக்கு பதிலாக பாவத்தின் தண்டனையை அனுபவிக்க முடியாது. மனிதனுடைய திரித்துவ சுபாவம் பாவம் செய்தது, எனவே மனிதனே சாக வேண்டும். ஒரு மனிதனே மனிதனுக்காக பிராயச்சித்தம் செய்ய முடியும். ஆனால், மொத்த மனுக்குலமும் பாவத்தில் இருப்பதால், எந்த ஒரு மனிதனுடைய மரணமும், அவனுக்காகவோ, மற்றவர்களுக்காகவோ, பிராயச்சித்தம் செய்ய முடியாது. மனிதன் தன் பாவத்துக்காக, சுய பிராயச்சித்தம் செய்ய முடியாது. *( எரே 13:23 எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும். ).*

**எனவே, இயேசு கிறிஸ்து மனித சுபாவத்தை தன்மேல் எடுத்துக்கொண்டு, மனிதனாகி , அதன் மூலமாக அவர் நியாயம் தீர்க்கப்பட்டு, தண்டிக்கப்பட்டு, மனுக்குலத்துக்கு பதிலாக மரிக்கும்படியாக வந்தார்.**

**ஆதாம் பாவம் செய்த போது, மொத்த மனுக்குலமும் அவனுக்குள், அவனது அரையில் இருந்தது. அது போலவே, இயேசு கிறிஸ்து சிலுவைக்கு போன போது மொத்த மனுக்குலமும் அவருக்குள், அவரது அரையில் இருந்தது. ( 1 பேது; 1;18-21. யோவான்; 1;14. யோவான்; 1;29 ).**

## ( 10 ). <u>பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பு. சிலுவையில்.</u>

*( 1யோவா 2:2 நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். )*

மனுக்குலம் மன்னிக்கப்படுமுன்பாக, அவர்கள் அவர்களது பாவங்களுக்காக நியாயம் தீர்க்கப்பட வேண்டும். எனவே இயேசு கிறிஸ்து, மனுக்குலத்தின் பாவங்களுக்காக நியாயம் தீர்க்கப்பட்டார். மனிதனின் திரித்துவம்...ஆவி,ஆத்துமா,சரீரம் - அனைத்தும் பாவம் செய்தது, பாவத்தின் தற்காலிக சுகபோகத்தில் சுகித்திருந்தது.

எனவே..சிலுவையில்..

**இயேசுவின் ஆவி உபத்திரவிக்கப்பட்டது**...எல்லா தண்டனைகளையும் ஏற்றுக்கொண்டது. (*மத்;27;46* ). தேவனுடைய பரிசுத்த ஆவியானவர், இயேசு கிறிஸ்துவை விட்டுப்போனார். அவர் தன் ஆவியில், அசுத்த ஆவியின் ஏளனத்தை எதிர்கொண்டார்.

**இயேசுவின் ஆத்துமா உபத்திரவிக்கப்பட்டது**. நம் ஆத்துமாவின் அனைத்து பாவங்களுக்குமான தண்டனையை ஏற்றுக்கொண்டது. சங்;22, ஐசா;53, 4 சுவிஷேஷங்களும் இயேசு அடைந்த அவமானம், நிர்வாணம், பரியாசவார்த்தைகள, அடிமைத்தனம் இவற்றை விவரிக்கின்றன.

**இயேசுவின் சரீரம் உபத்திரவிக்கப்பட்டது**. நம் சரீரத்தின் அனைத்து பாவங்களுக்குமான தண்டனையை ஏற்றுக்கொண்டது. சங்;22, ஐசா;53, 4 சுவிஷேஷங்களும் இயேவின் சரீரம் அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு,காயப்பட்டு, வெட்டப்பட்ட விதங்களை விவரிக்கின்றன.

**இயேசு இப்படி தண்டிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்ட போது - நாம் நம் பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்பட்டோம். ( ஐசா; 53: 4,5,6. ரோமர்; 8;1 )**

இப்போது பாவம் நிறைந்த மனுக்குலம் முழுவதுமாக நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டது. இயேசு கிறிஸ்து நம் பிரதிநிதி. நாம் ஒவ்வொருவரும் ***<u>அவருக்குள்</u>*** நியாயந்தீர்க்கப்பட்டு விட்டோம்.

இயேசு நம் பாவங்களுக்கான தண்டனையை மாத்திரம் ஏற்கவில்லை, அவர் **" பாவத்தையும் "** ( நம்முள் இருந்து கிரியைகளை நடத்திப்பிக்கிற சக்தி, ஒரு பிரமாணம், கிரியைகளின் உற்பத்தி ஸ்தானம். யோவான்; 1;29, ரோமர்; 5;12,13,20 ) தன்மேல் சுமந்து தீர்த்தார்.

## ( 11 ). <u>இயேசுவின் மரணம்</u>. ( ரோமர்; 6;6-8 ).

பாவத்தில் இருந்து விடுதலை - பாவம் செய்கிற பழைய மனிதன் அழிக்கப்பட்டதால். ( உ.ம். மது குடிக்கிற மனிதன் )

இயேசு நமக்காக மரித்தார்; ரோமர்; 5;8.

நம் பழைய மனிதன் அவரோடு சிலுவையில் அறையப்பட்டான்; ரோமர்; 6;6.

நாம் இயேசுவோடு கூட மரித்தோம்; ரோமர்; 6;8.

**<u>இயேசுவின் ரத்தம்;</u>**

*எபிரேயர்; 9;22 நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.*

**ஏன் ரத்தம்**; *லேவி 17:11 மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.*

*1யோவா 1:7 அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.*

## ( 12 ). <u>பாவ மன்னிப்பு.</u>

**பஸ்கா.** யாத்திராகமம்; 12.

*யாத் 12:23 கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர்*

*சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார்.*

கர்த்தர் இரத்தத்தை காணும்போது....கடந்து போவார் = மன்னிப்பு.

**இயேசு கிறிஸ்து எவ்வாறு நம் பாவங்களுக்காக பிராயச்சித்தம் செய்து, பாவமன்னிப்பை வாங்கி தந்தார் ?**

**எபிரேயர்; 9 ம் அதிகாரம்.**

வேதாகமம் ஒரு **உண்மையான ஆசாரிப்பு கூடாரத்தை** - பரலோக தேவாலயத்தை - கூடாரத்தை பற்றி விவரிக்கின்றது. அங்கே இயேசு கிறிஸ்து பிரதான ஆசாரியராக இருக்கிறார். பூமியில் இருந்த ஆசரிப்பு கூடாரம், பரலோக ஆசரிப்பு கூடாரத்தின் நிழலாகும். பரலோகத்தின் இந்த கூடாரத்திலே தேவனுடைய சிங்காசனம் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆசரிப்பு கூடாரத்தில்... மகா பரிசுத்த ஸ்தலத்தில் *எபி 9:7 இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான். ( லேவி; 16;14,23,37 ).*

இயேசு கிறிஸ்துவின் நிஜமான பிராயச்சித்தம். எபி; 9;12-15.

பாவ மன்னிப்பு; பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவின் ரத்தத்தை பார்க்கிறார் - கடந்து போகிறார் = **நமது பாவ மன்னிப்பு.**

**பாவத்தின் சம்பளமாகிய மரண தண்டனை செலுத்தப்பட்டாகி விட்டது.... எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டாகி விட்டது...." பாவம் " தீர்க்கப்பட்டாகி விட்டது....மனுக்குலம் விடுவிக்கப்பட்டாகி விட்டது.... ரட்சிக்கப்பட்டாகி விட்டது.......ரட்சிப்பு.**

## ( 13 ) இந்த ரட்சிப்பை நீங்கள் பெற்றுக்கொள்வது எப்படி ?

**" நான் ரட்சிக்கப்பட வேண்டும் "** என்ற தீர்மானமே, ஒருவர் தன் வாழ்க்கையில் எடுக்கக்கூடிய மிக முக்கியமான ஒரு தீர்மானம். இதுவே அவர் பரலோகத்தில் நித்தியமாக வாழப்போகிறாரா, அல்லது நரகத்தில் நித்தியமாக வேகப்போகிறாரா என்பதை தீர்மானிக்கும்.

தேவன் ரட்சிப்பை எல்லோருக்கும் கொடுக்க சித்தமாக இருக்கிறார். *தீத் 2:11 ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,*

இந்த ரட்சிப்பை தேவன் ஒரு இலவசமான ஈவாக கொடுக்கிறார். *எபே 2:7 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.*

*எபே 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;*

இந்த ரட்சிப்பை யாராலும், ஏதாவது செய்தோ, அல்லது செய்யாமல் இருந்தோ - பெற்றுக் கொள்ளவே முடியாது. இது ஒரு இலவசமான ஈவாக கொடுக்கப்படுகிறது. முற்றிலும் இது கிருபையினால் விசுவாசத்தை கொண்டு கிடைப்பது. **இயேசுவின் மேல் விசுவாசம்** ***மாத்திரமே*** ரட்சிப்பை தருகிறது. எந்த ஒரு கிரியையும் - வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிக நல்ல ஒரு கிரியையாக இருந்தாலும் - ரட்சிப்பை கொண்டு வர முடியாது. உண்மையில் ரட்சிப்பை தருகிற கிருபையோடு எதையாவது சேர்த்தால், அது கிருபையை விருதாவாக்கி விடும் என வேதம் எச்சரிக்கின்றது. ( *ரோமர்; 11;6, கலா; 2;21, 5;4,6* )

தேவன் தன் கிருபையினால், மனுக்குலத்தை ரட்சித்து இந்த ரட்சிப்பை எல்லாருக்கும் கொடுக்க விருப்பப்படுகிறார். ஆனால் ஒருவர் இந்த ரட்சிப்பை, விசுவாசத்தை கொண்டே பெற்றுக்கொள்ள முடியும். ***எபே 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;***

***ரோம 10:9 என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். 10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.***

***ரோம 10:13 ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.***

**சத்தமாக ஜெபியுங்கள்...**

**" தேவனே, இந்த சத்தியத்துக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவே, நீர் எனது கர்த்தர் என்றும், என் ரட்சகர் என்றும் அறிக்கை செய்கிறேன். உம்மை, தேவன், மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று என் இதயத்தில் விசுவாசிக்கிறேன். உமது வார்த்தையை விசுவாசித்து இப்போது ரட்சிப்பை பெற்றுக்கொள்கிறேன். என்னை ரட்சித்ததற்காக நன்றி ...ஆமென் "**

இப்போது நீங்கள் வேத வசனத்தின் படி ரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு தேவையானால், உங்கள் உலகப்பிரகாரமான பிறந்த நாள், சமயம், போல, மறுபடியும் பிறந்த இந்த முக்கியமான நாளை, சமயத்தை குறித்து வைத்துக்கொள்ளுங்கள். **நீங்கள் ரட்சிக்கப்பட்டவர்கள். அல்லேலூயா.**

## ( 14 ) ரட்சிப்பின் நன்மைகள்.

1. **மறுபடியும் பிறத்தல்.** தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து , அறிக்கை செய்த அந்த நொடியில், தேவனுடைய வார்த்தை உங்கள் ஆவியில் கிரியை செய்கிறது. அந்த கிரியையினால், நீங்கள் ஆவியில் மறுபடியும் பிறந்தவர்கள் ஆகிறீர்கள். ஆவியில் முற்றிலும் ஒரு புதிய சிருஷ்டியாய் ஆகிறீர்கள். *2கொரி 5:17 இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. யோவான்; 3; 3-6.*

2. **மரணத்தில் இருந்து ஜீவனுக்குள்;** *யோவா 5:24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பின வரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

3. **நம் புதிய ஆவி நித்தியமாக பாதுகாவலாக மூடப்பட்டிருக்கிறது** ( முத்திரையிடப்பட்டிருக்கிறது ). பாவம் அதை ஒருபோதும் தீட்டுப்படுத்த முடியாது. *எபே 1:13 நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.*

*1யோவா 3:9 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், எனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்.*

4. **நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறோம்.** ரட்சிப்பின் பிரதான நோக்கம் இதுவே. தேவனோடு ஒரு நெருங்கிய, அன்பான உற. *யோவா 3:16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*

*யோவா 17:3 ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.*

**இயேசு சிலுவையில் நம் நோய்களையும் சுகவீனங்களையும் சுமந்தார்.** *லூக் 4:18 கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,*

*1பேது 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.*

நாம் செழிப்பாக இருக்கும்படியாக அவர் மரித்தார். *2கொரி 8:9 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.*

*3யோவா 1:2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.*

மேற்கூறிய இவைகளோடு **விடுதலை, தேவனோடு நீதிகரணம், பாவமன்னிப்பு** ...என்பது போன்ற பல நன்மைகள் நாம் ரட்சக்கிப்பப்படும்போது பெற்றுக்கொள்கிறோம்.

ரட்சிக்கப்படுவது என்பது ஒரு நொடி அனுபவம் என்று நாம் நினைத்தாலும், உண்மையில் அது ஒரு தொடர் நிகழ்ச்சி. ஒருவர் ரட்சிக்கப்படும்போது, அந்த நொடியில் அவர் **ஆவியில்** புதிய சிருஷ்டி ஆகிறார். அவரது **ஆவிக்குரிய ரட்சிப்பு முற்றிலும் பூரணமாக நிறவேறிற்று.** அவர் இயேசுவுக்குள்

பரிபூரணமுள்ளவராக இருக்கிறார். அவருக்கு கூடுதலாக விசுவாசமோ, சந்தோஷமோ, வல்லமையோ தேவை இல்லை.

*கொலோ 2:9 ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. 10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.*

என்றாலும், நாம் நம் உள்ளில் மாத்திரம் மாற்றப்பட்டிருப்பது தேவனுடைய சித்தம் அல்ல. நம் உள்ளில் நடந்திருக்கும் இந்த ரட்சிப்பு நம்முடைய பௌதீக வாழ்க்கையிலும் வெளிப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நம்முடைய **மனதை புதிதாக்குவதனால்** இது சாத்தியமாகும்.

*ரோம 12:1 அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*

*ரோம 12:2 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*

மனிதன் - ஆவி, ஆத்துமா, சரீரம் உடையவன். *1தெச 5:23 சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*

நாம் யார், நம்மிடத்தில் என்ன இருக்கிறது என்று, நம்மைப்பற்றி தேவன் வேதாகமத்தில் சொல்லி இருப்பதை விசுவாசிக்குமாறு, நம்முடைய சிந்தனையை மாற்ற வேண்டும். அப்போது நம்முடைய ஆவியில் வைக்கப்பட்டிருக்கின்ற **தேவனுடைய ஜீவனை நாம் அனுபவிக்க முடியும்.**

நம்முடைய மனதை மாற்ற வில்ல என்றால், இயேசு நமக்காக தந்திருக்கின்ற பரிபூரண ஜீவனை அனுபவிக்காமலேயே நம் முழு வாழ்க்கையையும் இப்பூமியில் கழிக்க வேண்டியிருக்கும்.

*யோவா 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

முடிவாக, நாம் தேவனோடு சேர்ந்திருக்க செல்லும் போது, நம்முடைய ஆத்துமா முற்றிலும் புதிதாக்கப்பட்டு, நமக்கு ஒரு புதிய ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படும்.

*பிலி 3:21 அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகமறுரூபப்படுத்துவார்.*

1கொரி 15:44 ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, அவிக்குரிய சரீரமுமுண்டு.

**அப்போது ரட்சிப்பு பரிபூரணமாகும்.** ஆமென்.

-----------------------------------------

சகோதரன். த. வெர்ஜின் குமார்.

-------------------------------------------------------

அன்பு சகோதரா/சகோதரி, நீங்கள் இதை படித்ததற்காக, என் இதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றி சொல்லிக்கொள்கிறேன். உங்கள் அபிப்ராயங்களை நான் மிகவும் வரவேற்கிறேன். ஏதாவது சந்தேகங்களோ, கேள்விகளோ இருக்குமானால், தயவாக என்னை தொடர்பு கொள்ளவும். போன்; 25572195,99663557. email; deeveekumar@yahoo.com. இதைப்படித்து நீங்கள் ரட்சிக்கப்படுவதாக இருந்தால் தயவாக எனக்கு தெரிவிக்கவும். மற்றவர்களுக்கு முடிந்த வரையில் இதை கொடுத்து அவர்களையும் ரட்சிப்புக்குள் நடத்துங்கள். நன்றி.

இதை தயாரிக்க உபயோகப்படுத்தப்பட்டவை; டேக்ஸ் பையிள் கமெண்டரி, ஆன்ரு வாமக் பைபிள் கமென்ரி, வைன் புதிய ஏற்பாட்டு சொல் அகராதி, ஸ்டிராங் வேதாகம வார்த்தை விளக்கம், டான் க்ரோ சீஷனாக்கும் வேத பாடங்கள், வாட்ச் மேன் நீ எழுதிய " ஆவிக்குரிய மனிதன் ".. இன்னும் பல.

---------------------------------------------